IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No. 44/2023

Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நட்டேஸ்வர் | Caste | : | |
| Father Name | : | சண்முகம் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of August, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. என்னுடைய முதல் விசாரணையில் அதாவது பிரமாண வாக்குமூலத்தில் என்ன சங்கதி உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். நான் மாநகராட்சியில் வாங்கிய அனுமதியின்படி தான் என்னுடைய வீட்டை கட்டியுள்ளேன் என்றால் ஆமாம். முதல் மாடி அதாவது G1 கட்டி கொள்ளலாம் என்று அனுமதி பெற்றுள்ளேன் ஆனால் என்னிடம் பணம் இல்லாததால் தரைதளத்தில் மட்டும்தான் வீடு கட்டியுள்ளேன். முதல் மாடி கட்டவில்லை.

2. தாவா சொத்தின் விஸ்தீரணம் 2100 சதுர அடி ஆகும். தோராயமாக அதாவது ப்ளான் அப்ருவல் படி தான் சுமார் 1500 சதுர அடியில் வீடு கட்டியுள்ளேன். என்னுடைய வீடு 971 சதுர அடியில் தான் எனக்கு ப்ளான் அப்ருவல் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை எனக்கு வீடு கட்டிக்கொடுக்க பொறியாளர்தான் கேட்க வேண்டும்.

3. என்னுடைய ப்ளான் அப்ருவல்படி நான் வீடு கட்டும்போது வீட்டை சுற்றி 5 அடி விடப்பட வேண்டுமென்பது என்னுடைய ப்ளான் அப்ருவலில் உள்ளதா என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 2 வது பக்கத்தில் 9 வது வரியில்

Rule 35 of Tamil Nadu combined development and building rules 2009 Rule No.35 பொதுவாக ஒரு வீடு கட்டப்பட வேண்டும் என்றால் 1.5 மீட்டர் அளவு இடம் விட்டுதான் கட்ட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

4. மேற்படி அதே Rule No.35(3) ல் இடம் இல்லாமல் அவர்கள் இடத்தில் இடம் விடாமல் வீடு கட்டிகொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளது என்பதைபற்றி தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய வீட்டின் பக்கத்தில் அதாவது பிரதிவாதியின் வீட்டிற்கு பின்புறம் 5 அடி காற்றோட்டத்திற்கு விடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இல்லை ஆனால் அவர்களுடைய பிள்ளர்களை கொண்டுவந்து என்னுடைய வீட்டின் சுவர்களின் பக்கத்திலே வைத்துவிட்டார்கள் அதனால் காற்றோட்டம் இல்லை. தற்போது அந்த இடத்தில் வீடு கட்டுவதற்காக சுவரை எழுப்பியுள்ளார்கள்.

5. நான் என்னுடைய இடத்தில் 1 அடி விட்டுதான் வீடு கட்டியுள்ளேன். அப்படியென்றால் என்னுடைய வீட்டின் சுற்றுசுவரில் தண்ணீர் என்னுடைய வீட்டிலே விடுமாறு சுவர் எழுப்பியுள்ளேனா என்றால் என்னுடைய வீட்டின் தண்ணீர் எங்களுடைய வீட்டிலேதான் விழும்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI